(நண்பகல் 12-00)

(8) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுக படுத்தப்பட்டிருக்கிறது.

(9) 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 20 — வேளாண்மை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

" நிதிக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 32,63,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss the need to bring down the prices of chemical fertilisers, I move—

'That the allotment of Rs. 32,63,47,000 under Demand No. 20—Agriculture—be reduced by Rs. 100.'

திரு. குழ. செல்லையா: தலைவரவர்களே, தாளடிப் பயிருக்குப் போதிய தண்ணீர் கிடைக்காததினால் தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்படுவது குறித்து விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 32,63,47.000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.